ISSN : *2456-821X* அவையம் 1 (2) 2017 P.No. : *41 - 47*

புதிய அவையம்

# சங்க இலக்கியத்தில் செவ்வியல் கூறுகள்

**முதுமுனைவர் இரா. சங்கர்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் - 635 601*

**கட்டுரை பெறப்பட்டது: *28.11.2017*** **ஏற்கப்பட்டது : *18.12.2017***

*உலக இலக்கியங்கள் யாவுமே மனிதனுக்கு ஏதேனும் ஒரு நற்கருத்தினை எடுத்தியம்புவதற்காகத் தோன்றிய இலக்கியங்களே ஆகும். அதில் குறிப்பிடத்தக்க இலக்கியங்களாகத் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றிலும் இரண்டாயிரம் ஆண்டைக் கடந்தும் தமிழ் இலக்கிங்களுக்கெல்லாம் முதன்மைச் சிறப்பு பெற்றதாக விளங்குவது சங்க இலக்கியமே. அம்முதன்மைச் சிறப்புப் பெறுவதற்குக் காரணமாக இருப்பது அவ்விலக்கியத்தில் காணலாகும் உலகத்தோரெல்லாம் ஏற்றுக்கொள்ளும் செவ்வியல் கூறுகளே ஆகும். சங்க இலக்கியத்தில் காணப்படும் செவ்வியல் கூறுகளை அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற அடிப்படையில் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## சங்க இலக்கியத்தின் செவ்வியல் தன்மை

*கல்வி, கேள்வி ஞானமிக்கவர்களும் வியக்கும் சில இலக்கியக் கூறுகளைத்தான் செவ்வியல் தன்மை என்று அறிஞர்கள் உரைக்கின்றனர். பாமரனையும் சிந்திக்க வைக்கும் இலக்கியக் கூறுகளையும் செவ்வியல் தன்மை கொண்டதென்று உரைக்கலாம். நவீனகாலத்தில் பல்வேறு நிலைபெற்ற உணர்வுகளைத் தூண்டுகின்ற கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் எனத் தோன்றியும் மறைந்தும் கொண்டிருக்கின்ற இந்நிலையிலும் கூட சங்க இலக்கியம் தனக்கான இடத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவ்விலக்கியத்திலுள்ள பொதுமைக் கூறுகள்தான்.*

*'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்' என்று காதல் வாழ்க்கைக்கு மட்டும் பொதுமைக் கூறுகள் சுட்டியிருப்பார்களானால் இன்றைக்கு அவ்விலக்கியம் காலவெள்ளத்தில் கரைந்திருக்கும்; அதற்கு மாறாக உலகிலுள்ள அத்துனை இன்பதுன்ப நிகழ்வுகளுக்கும் பொதுமைக் கூறுகள் தன்னுள்ளே இடம்பெறச் செய்தமையாலேயே புதுவகை இலக்கியங்கள் பல தோன்றினாலும் தன்னை அவற்றிற்கெல்லாம் முதன்மையானதாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது.*

### *1. அறத்தை வலியுறுத்தும் செவ்வியல் தன்மை*

*இவ்வுலகம் அனைவருக்கும் பொது என்பதைத் தமிழன் உணர்த்திய கருத்து இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் பொதுமக்கள் மிகுதியாகக் கூடுகின்ற பொதுஇடங்களில் பார்வைக்கு இடம்பெறுகின்ற,*

***'யாதும் ஊரே யாவரும் கேளீர்***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா***
***நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன***
***சாதலும் புதுவது அன்றே வாழ்தல்***
***இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்***
***இன்னாது என்றலும் இலமே' ( புறம்:192:1 – 6)***

*என்ற வரிகளில் இவ்வுலகம் அனைவருக்கும் சொந்தமானது என்றும், இவ்வுலகத்திலுள்ளோர்கள் நன்மையும் தீமையும் தாமே ஏற்படுத்திக் கொள்வதன்றி பிறரால் ஏற்படுவதில்லை என்றும், மனிதன் பிறந்த உடனே இறப்பு நோக்கித்தான் தனது வாழ்க்கைப் பயணம் தொடங்குகிறது இத்தகைய மனிதவாழ்வில் மகிழ்சியுறும் காலத்தில் செருக்குற்றும், வெறுப்புற்ற காலத்தில் சோர்வுற்றும் இல்லாமல் ஒருநிலையில் இருப்பதுதான் சிறப்பு என்று விளக்கும் இச்செய்யுளின் கருத்தை இவ்வுலகத்தோர் யார்தான் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பார்கள்.*

*இதனைப் போன்றே மனிதர்கள் இவ்வுலக வாழ்வில் எவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதாகப் 'பயன்கருதியே ஒருவனோடு சிரித்த முகத்தோடு உறவாடும் விஞ்ஞான உலகான இக்காலத்தவர்களுக்குச் சங்க காலத்திலேயே உரைத்திருக்கிறார்கள்*

***'ஆற்றுதல் என்பது ஒன்றலந்தவர்க்கு உதவுதல்'*** *( கலித்தொகை: 133: 6 )*

*என்றும்,*

*சிரித்து ஒருவனைச் சீரழித்தலைப் போன்ற கொடுஞ்செயல் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்பதை,*

***'போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை'*** *( கலித்தொகை: 133: 7)*

*என்றும் குறிப்பிட்டிருக்கிறது.*

*பண்பு என்பதற்குப் பல நிலைகளில் விளக்கம் கொடுக்கும் தற்காலச் சமூகத்திற்குச் சங்க காலத்திலேயே உணர்த்தி இருக்கிறார்கள்,*

***'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'*** *( கலித்தொகை: 133: 8)*

*என்றும்,*

*வெட்டியெறிகின்ற வீரமிக்க பழந்தமிழர்களிடத்தும் தன்னைச் சார்ந்தவரிடத்து வெறுக்காமல் காப்பாற்றுவதே அன்பு என்பதை,*

*'**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை'*** *( கலித்தொகை: 133: 9)*

*என்றும் குறிப்பிட்டிருக்கிறது.*

தன்னில் யாரும் அறிவால் உயர்ந்தவர்களும் இல்லை, உயர்ந்தவர்களாக ஏற்றுக்கொள்ளவும் கூடாது என்ற மனநிலை படைத்தோர் இருக்கும் இக்காலத்தவர்க்கு எதிர்ப்பாக, ***'அறிவு எனப்படுவது பேதையர்சொல் நோற்றல்'*** *( கலித்தொகை: 133: 10 )*என்ற அடிகளில் 'அறிவற்றோர் சொல்லைப் பொறுத்தருள்தலே அறிவு என்று சங்க இலக்கியம் சுட்டிக்காட்டுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அம்மக்கள் எந்தப் பல்கலையில் பயின்றனரோ ' கூறியபடி நடத்தல்தான் நுட்பம்' என்பதனை,

***'செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை'*** *( கலித்தொகை: 133: 11)* என்ற அடிகளிலும்,

இரகசியங்களைக் காத்தலும், குற்றம் புரிந்தவனைத் தண்டித்தலும், தனக்கான காலம் வரும்வரையில் பொறுத்திருத்தலும் அறப்பண்பு என்பதனை,

***'நிறைவு எனப்படுவது மறைபிறர் அறியாமை***
***முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்***
***பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்'*** *(கலித்தொகை: 133:1214)*

என்ற வரிகளில் நிலைநிறுத்தும் இந்த அறப்பண்புகள் எல்லாக் காலத்தவர்க்கும் பொதுத்தன்மை மிக்கவைகளாக இருக்கின்றன.

தாயிக்கும் பிள்ளைக்குமான உறவிலும் பிரிவு உண்டு என்பதனை விளக்கும் நிலையில் அமையும் பாடல்களாகக் 'களவு மணத்தில் ஈடுபட்டு, காதலனுடன் உடன்போக்கு நிகழ்த்திய தலைவியைத் தேடிச் சென்ற செவிலித் தாயை எதிர்ப்பட்டவர்கள் அவளின் மனவருத்தம் போக்கும் விதமாக,

***'பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை***
***மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்***
***நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே'*** *( கலித்தொகை:9:12- 14 )*

என்ற வரிகளில் கூறப்படும் "நறுமணம் மிக்க சந்தனம் மலையுச்சியில் பிறந்தாலும் அது மலைக்குச் சொந்தமல்ல, அதனை யார் பூசிக்கொள்கிறார்களோ அவர்களுக்கே சொந்தம்" என்பதும்,

***'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை***
***நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்***
***தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே'*** *( கலித்தொகை:9:15- 17 )*

என்ற வரிகளில் கூறப்படும் " நீரில் முத்துக்கள் பிறந்தாலும் அது நீருக்குச் சொந்தமல்ல அம்முத்துக்களைச் சூடிக்கொள்பவர்களுக்கே சொந்தம்" என்பதும்,

***'ஏழ்புணர் இன்னசை முரல்பவர்க்கு அல்லதை***
***யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?***
***சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே'*** *( கலித்தொகை:9:18- 20 )*

என்ற வரிகளில் கூறப்படும் "யாழில் இசை பிறந்தாலும் அந்த இசையைக் கேட்டு இன்பமுறுகின்ற மனிதர்க்குப் பயன்படுகிறதே அன்றி யாழிற்குப் பயன்படுவதில்லை" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகள் யாவும் நவீன யுகத்தில் பலதரப்பட்ட பண்பாட்டைப் பெற்ற மனிதரிடத்தும் இரண்டாயிரம் ஆண்டைக் கடந்தும் நிலைத்து நிற்கும் செவ்வியல் தன்மையைப் பெற்றதாகத் திகழ்கிறது.

குடும்ப அமைப்பைக் கடந்து சமூக மக்களுக்கு அறம்கூற முற்படும் இவ்விலக்கியம் 'உலகிலுள்ள அனைவராலும் அனைத்துச் செயல்களையும் செய்துவிட முடியாது. பொதுவாக நல்ல செயல்களைச்

செய்ய எல்லோராலும் முடியாது. அருஞ் செயல்களை ஆற்றுவோர் ஒரு சிலரே. உயர்ந்த உள்ளமும், நுட்ப அறிவும், சிறந்த ஆற்றலும் உள்ளவர்தாம் உயர்ந்த செயல்களை உறுதியுடன் செய்து முடிப்பார்கள். தீமை செய்வது எளிது என்ற அடிப்படைறில்,

***'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லாரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே'*** *( புறம்: 195: 6-9 )*

என்று 'நன்மை செய்வதற்கு முடியாதவர்களாயிருந்தாலும் தீமை செய்வதைத் தவிர்த்து விடுங்கள். அதுதான் எல்லாரும் மகிழ்ச்சியடையத் தகுந்த இனிய குணம். அதுமட்டுமன்றி உங்களை நல்ல நெறியிலே செலுத்தும் வழியும் அதுதான் என்றும், எவ்வினத்தார்க்கும் எம்மதத்தார்க்குமான பொதுமைக் கூறுகள் கொண்ட பாடலாக இது விளங்குகிறது. இதனைப் போன்றே,

***'நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***
***உணவெனப்படுவது நிலத்தொடு நீரே***
***நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு***
***உடம்பும் உயிரும் படைத்திசினோரே'*** *(புறம்: 18: 18–23)*

என்று, 'உண்ணும் நீரின்றேல் உடம்புகள் அழியும். உடலுக்கு உணவு கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் ஆவார் என்று மண்ணையும் நீரையும் இணைத்துரைப்பது போன்று மனித மாண்புகளை இணைத்துப்பேசுகின்று இவ்வரிகள். அறத்தை உணர்த்தும் செவ்வியல் தன்மை போன்றே, பொருளை விளக்கும் செவ்வியல் தன்மையும் இவ்விலக்கித்தில் காணமுடிகிறது.

### 2. பொருளை வலியுறுத்தும் செவ்வியல் தன்மை

அறமற்றவர்க்கு அவ்வுலகில் இடமில்லை என்பதைப் போன்றே பொருளில்லார்க்கு இவ்வுலகில் இடமில்லாத நிலை சமகாலத்தில் நிலவிவருவதைக் காண்கிறோம். பொருளற்றவர்களை மீண்டும் பொருளைப் பெற இயலாத நிலைக்குத் தள்ளி விடுகின்ற இக்காலத்தவர்க்கு அறிவுரை கூறும்நிலையில் 'வணிகம் செய்தவனும் மறுமைக்காக அறத்தின் வழி வணிகம் செய்தான் என்பதை,

***'இம்மைச் செய்தது மறுமைக்காஅம் எனும்***
***அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்***
***சான்றோர் சென்ற நெறியென***
***ஆங்குப்பட்டன்று அவன்கை வண்மையே'*** *( புறம்: 134 )*

என்ற பாடல் வரிகள் பொருளீட்டும் அறத்தைச் சுட்டிக் காட்டி நிற்கிறது.

எத்தகைய கொடிய வறுமையிலும் பிறரிடம் கையேந்தக் கூடாது என்பதனையும், வறுமையில் வாடிக்கொண்டிருப்பவனுக்கு உதவாத குணமும் இழிவானது என்பதையும் உலகத்தோர் அத்தனை நபர்களும் ஏற்றுக்கொள்ளும் விதமாக,

'***ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்***
***ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று***

***கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்***

***கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று'*** *( புறம்: 204: 1- 4 )*

என்ற வரிகள் எக்காலத்தவர்க்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்தும் நிலையில் இடம்பெற்றிருக்கிறது.

தம்மிடமுள்ள செல்வத்தைச் சிதைத்து வாழ்பவனும், பெற்றோர் ஈட்டிய பொருளில் பெருமை தேடுபவனும் உலகத்தில் கையேந்தி வாழ்தலுக்கு ஒப்பாவான் என்பதனை,

***உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்***

***இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு…'*** *( குறுந்தொகை:283: )*

என்ற குறுந்தொகை வரிகள் விளக்குகின்றன.

இதற்கும் மேலாக, கடன் பெற்று வாழும் வாழ்க்கை காலங்காலமாக நிலைபெற்றிருக்கின்ற ஒருசெயல்தான் என்பதனையும் கடனாகப் பொருளைப் பெறுகின்ற பொழுது மனதில் மகிழ்ச்சியும், அப்பொருளைத் திரும்பக் கொடுக்கையில் முகவாட்டமும் கொள்வர் என்பதனை,

***'உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும்தாம்***

***கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்***

***பண்டும் இவ்வுலகத்து இயற்கை அஃதின்றும்***

***புதுவது அன்றே………………………..'*** *( கலித்தொகை 22 : 1 – 4)*

என்ற கலித்தொகை வரிகள் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

பயன்கருதியே பழகும் நபர்களை இனங்கண்டுகொள்ள வேண்டும் என்பதனை,

***'நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்***

***பயன் இன்மையின் பற்றுவிட்டு ஒரூஉம்***

***நயனின் மாக்கள்……………. ……………'*** *(அகம்: 71 : 1-3 )*

என்ற வரிகளில், 'செல்வம் நிறைந்திருக்கும் காலத்தில் நட்பு செய்வர்; செல்வம் குறைந்துவிட்டால் செல்வம் நிறைந்திருக்கும் வேறு மனிதரைத் தேடும் பொருட்டுப் பிரிவர்; செல்வம் குறைந்தவர்களால் தனக்குப் பயனில்லை என்று கருதி அவருடைய பழைய தொடர்பை விட்டுவிடுவர்; இவர்கள் நன்றி அறிவற்ற விலங்குகள். ஒருவர்க்குச் செல்வம் உள்ள காலத்தில் அவருடைய உதவி பெற்று வாழ்வதும், அவர் செல்வத்தை இழந்து வறுமையடையும் போது அவரை விட்டுப்பிரிதலும் நன்றிகெட்ட தன்மை என்தனை உணர்த்தி நிற்கின்றன இவ்வரிகள்.

செல்வத்தின் பயனை விவரித்துரைக்கும் நற்றிணை 'பொருளைச் சேர்த்து சேர்த்து வைப்பது சேர்க்கையல்ல மனிதத்தை மற்றோர் போற்ற மதிப்பதுதான் பெருஞ்செல்வம் என்பதனை,

***'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்***

***செல்வம் அன்று தம்செய் வினைப்பயனே***

***சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்***

***புண்கண் அஞ்சும் பண்பின்***

***மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே'*** *( நற்றிணை: 210: 5 - 9)*

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. இதனைப் போன்றே பொருளைமட்டும் வலியுறுத்தாமல் இன்பத்தை வழியுறுத்தும் செவ்வியல் தன்மைக் கூறுகளையும் இவ்விலக்கியத்தில் காணலாம்.

### *3. இன்பத்தை வலியுறுத்தும் செவ்வியல் தன்மை*

பொதுவாக அறம்சார்ந்த கருத்துகள்தான் பல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் தன்மை மிக்கது நினைப்பது இயல்பே. அதனைக் காதல் வாழ்க்;கையையும் உலகோர் செவ்வியல் தன்மையில் எடுத்துரைக்கமுடியும் என்னும் விதமாக,

***'யாயும் ஞாயும் யாராகி யோரே***
***எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புனப் பெயல் நீர்போல***
***அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே'*** *( குறுந்தொகை: 40: 1-5 )*

என்ற வரிகளில், அன்பின் பிணைப்பை உள்ளத்தின் கலப்பை இந்நிலையில் வேறு எந்த இலக்கியங்களும் எடுத்துக்கூறமுடியாது. அத்தகைய செவ்வியல் தன்மை கொண்டது சங்க இலக்கியம். அது இன்பத்தின் அடுத்த நிலையான வீடுபேற்றையும் வலியுறுத்தி நிற்கிறது.

### *4. வீடுபேற்றை வலியுறுத்தும் செவ்வியல் தன்மை*

அகமும் புறமுமன்றி வேறில்லை சங்க இலக்கியத்தில் என்றுரைப்போர்க்கு வீடுபேற்றைப் பற்றியும் இவ்விலக்கியம் உணர்த்தி இருக்கிறது என்பதற்குச் சான்றாக,

***செறுதீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்***
***சேரா அறத்துச் சீரில்லாரும்***
***அழிதவப் படிவத்து அரியோரும்***
***மறுபிறப்பு இல்லெனும் மடவொரும் சேரார்***
***நின்னிழல்..............'*** *( பரிபாடல்: 5: 73 – 77)*

என்ற பாடலடிகளில் 'பிற உயிர்கள் மீது இரக்கம்காட்டாதவர்களும், அடங்காத சினமுடையவர்களும் அறநெறியைப் போற்றாதவர்கள். இவர்கள் வீடுபேற்றை அடைய விரும்பாதவர்கள் என்று பரிபாடல் குறிப்பிடுகிறது. முறைவழியில் பொருளீட்டி இயலாதோர்க்குக் கொடுத்துதவி சிறப்புற்று வாழ்தலே வீடுபேற்றை அடையச் செய்யும் என்பதையும் இவ்விலக்கியம் எடுத்துரைக்கிறது.

### முடிவுரை

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் செவ்வியல் கூறுகள் மட்டும் அல்லாமல். சங்க இலக்கியத்தில் மிகுதியான செவ்வியல் கூறுகள் இடம்பெற்றிருக்கின்றன. இச்செவ்வியல் பாடலின் கருத்துகள் மற்றும் அறிவுரைகள் யாவும், எந்நாட்டில் பிறந்தவர்க்கும் எம்மதத்;தைச் சார்ந்தவர்க்கும், பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்க்கும் அப்பாடல் வரிகளின் கருத்துகள் விளங்கிக்கொள்ளும் நிலையில் காலங்கடந்து மொழிகடந்து தனக்காகக் குறிப்பிட்டது போலவே எண்ணி மெய்சிலிர்த்துப் போற்றுகிறார்கள். இவ்வகைத் தன்மையைத்தான் செவ்வியல் தன்மை என்று கூறுகிறோம். இத்தன்மையைப் பெற்ற இலக்கியமாகச் சங்க இலக்கியம் இருப்பதனால்தான் இரண்டாயிரம் ஆண்டைக் கடந்துவந்து நம்மை வியக்கவைக்கிறது.

## பயன்பட்ட நூல்கள்


1. அகநானூறு தொகுதி 1,2 முனைவர் இரா. ஜெயபால் ( உரையாசிரியர்) 2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.

2. கலித்தொகை, முனைவர் அ. விசுவநாதன்( உரையாசிரியர்) 2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.

3. குறுந்தொகை தொகுதி 1,2 முனைவர் இரா. ஜெயபால் ( உரையாசிரியர் ) 2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.

4. எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும், சாமி. சிதம்பரனார், 2003 அறிவுப் பதிப்பகம், சென்னை-14

5. நற்றிணை, முனைவர் கு. வெ . பாலசுப்பிரமணியன்; ( உரையாசிரியர்) 2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.

6. பரிபாடல், முனைவர் பெ. சுப்பிரமணியன்; ( உரையாசிரியர்)2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.

7. புறநானூறு தொகுதி 1,2 முனைவர்கு.வெ.பாலசுப்பிரமணியன்; ( உரையாசிரியர்)2007 நியூசெஞ்சுரிப் பதிப்பகம், சென்னை-98.


புதிய அலையம்